சுருக்கம்

வேலூர் மாநகராட்சி – விரிவாக்கம் – உள்ளாட்சி அமைப்புகளை இணைத்தல் – திருத்திய ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை

அரசாணை (நிலை) எண்.221 நாள்:28.9.2010.

படிக்கப்பட்டன:

(1) அரசாணை (நிலை) எண்.52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 17.3.2010.

(2) வேலூர் மாநகராட்சி ஆணையாளர் கடிதம் எண் 11138/2007/எப்1 நாள் 9.9.2010.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம். ந..க.எண்.44570/2010/எம்.3, நாள் 21.9.2010.

----

ஆணை:–

வேலூர் நகராட்சி, அதன் அப்போதைய எல்லைகளில் எவ்வித மாற்றமுமின்றி, அப்படியே, அதாவது, 48 வார்டுகளுடன், 1.8.2008 முதல் மாநகராட்சியாக அமைக்கப்பட்டு, 2008–ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சிச் சட்டத்தின்கீழ் (தமிழ்நாடு சட்டம் 26/2008) மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது.

2. மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், வேலூர் மாநகராட்சியுடன், 3 நகராட்சிகள், 3 மூன்றாம் நிலை நகராட்சிகள், 8 பேரூராட்சிகள், மற்றும் 61 ஊராட்சிகளை இணைத்து மாநகராட்சி எல்லை விரிவாக்கம் செய்ய முடிவு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. வேலூர் மாநகராட்சி ஆணையாளர், மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட தமது கடிதத்தில், வேலூர் மாநகராட்சி மன்றம், முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி, வேலூர் மாநகராட்சியுடன் இணைக்க முடிவு செய்யப்பட்டுள்ள பெரும்பான்மையான உள்ளாட்சிகள், நகர்ப்புரமாக வளர்ச்சியடையாமல் கிராமப் பகுதியாகவே உள்ளதாகவும், மாநகராட்சியிலிருந்து நீண்ட தொலைவில் அமைந்துள்ளதாகவும், இவற்றை இணைப்பதால் கிராமப் பகுதிகளுக்கு கிடைக்கப்பெறும் அரசு நிதி உதவி மற்றும் திட்டங்கள் கிடைக்கப்பெறாமல் போக நேரிடலாம் எனவும், மேலும், தற்போது இப்பகுதிகள் கிராமப்புரப் பகுதிகளாக இருப்பதால் நகர்ப்புர கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த வேண்டிய தேவையில்லை எனவும் குறிப்பிட்டு, அவ்வரசாணையின்படி வேலூர் மாநகராட்சியுடன் சேர்க்க முடிவு செய்யப்பட்ட 75 உள்ளாட்சி அமைப்புகளில் 59 உள்ளாட்சி அமைப்புகளை நீக்கம் செய்யலாம் என தீர்மானித்துள்ளதாகத் (தீர்மானம் எண்.445 நாள் 9.9.2010) தெரிவித்துள்ளார். அதன் விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| நகராட்சிகள் | ஆற்காடு , வாலாஜாப்பேட்டை , இராணிப்பேட்டை(3) |
| மூன்றாம் நிலை நகராட்சி | மேல்விஷாரம் (1) |
| பேரூராட்சிகள் | பென்னாத்தூர், திருவலம் (2) |

| | |
|---|---|
| ஊராட்சிகள் | அடுக்கம்பாறை, துத்திப்பட்டு, சித்தேரி, குப்பம், சிறுகாஞ்சி, சதுப்பேரி, செம்பேடு, அப்துல்லாபுரம், அன்பூண்டி, மேல்மொணவூர், கீழ்மொணவூர், கருகம்பத்தூர், தண்டலம் கிருஷ்ணாபுரம், சேனூர், ஜாப்ராபேட்டை, வஞ்சூர், கரசமங்கலம், வண்டரந்தாங்கல், மெட்டுக்குளம், வெங்கட்டாபுரம், பெருமுகை, அரப்பாக்கம், ஏரந்தாங்கல், சேர்க்காடு, புத்தூர், அரும்பருத்தி, கார்ணாம்பட்டு, கண்டிப்பேடு, சேவூர், கரிகிரி, பிரம்மபுரம், லாலாப்பேட்டை, சீக்கராஜபுரம், நரசிங்கபுரம், குகையநல்லூர், குப்பத்தாமோட்டூர், செம்பராயநல்லூர், ஆரிமுத்து மோட்டூர், அம்முண்டி, வன்னிவேடு, அம்மணந்தாங்கல், வி.சி. மோட்டூர், மாந்தாங்கல், செட்டித்தாங்கல், வானாப்பாடி, முகுந்தராயபுரம், வேப்பூர், நல்லாக், மணியம்பட்டு, தெங்கால், நந்தியாலம், கீழ்மின்னல், பூட்டுத்தாக்கு (53) |

4. மேலும் அத்தீர்மானத்தின்படி, நகர்மயமாதலுக்கான பல்வேறு குறியீடுகள் ஆய்வு செய்யப்பட்டதில், தற்போது வேலூர் மாநகராட்சிக்கு அருகில் அமைந்துள்ள நகர்ப்புரமாக வளர்ச்சியடைந்துள்ள கீழ்க்காணும் 16 உள்ளாட்சிகளை மட்டும் இணைத்து வேலூர் மாநகராட்சியை விரிவுபடுத்துவது சிறந்தது என கருதி வேலூர் மாநகராட்சி மன்றம் தீர்மானித்துள்ளதாகவும் வேலூர் மாநகராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

| | |
|---|---|
| மூன்றாம் நிலை நகராட்சிகள் | சத்துவாச்சாரி , தாராபடவேடு (2) |
| பேரூராட்சிகள் | சேண்பாக்கம், தொரப்பாடி, அல்லாபுரம், கழிஞ்சூர், காந்திநகர், காட்பாடி (6) |
| கிராம ஊராட்சிகள் | பலவன்சாத்து, விருப்பாட்சிபுரம், கொணவட்டம், விருதம்பட்டு, காங்கேயநல்லூர், இடையன்சாத்து, அரியூர், அலமேலுமங்காபுரம் (8) |

5. வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர் மாநகராட்சியுடன் இணைக்க மாநகராட்சி மன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட 16 உள்ளாட்சி அமைப்புகளுடன், சித்தேரி ஊராட்சியையும் இணைக்க பரிந்துரை செய்துள்ளதாக மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தமது கடிதத்தில், நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

6. நகராட்சி நிர்வாக இயக்குநர், தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ள விரிவாக்கம் நிர்வாகத்திற்கு ஏற்புடையதாகவும் மாநகராட்சியின் அருகில் உள்ள பகுதிகளை மட்டும் இணைக்கும் வகையிலும் மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளான சாலை வசதி, குடிநீர் வசதி, பாதாள சாக்கடை திட்டம் போன்ற திட்டங்களை சிறந்த முறையில் ஒருங்கிணைத்து செயல்படுத்த ஏற்புடையதாக இருக்கும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும், மேற்படி 17 உள்ளாட்சி மன்றங்களும், வேலூர் மாநகராட்சியுடன் இணைய 2007/2008–ஆம் ஆண்டில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

7. நகராட்சி நிர்வாக இயக்குநர், வேலூர் மாநகராட்சி ஆணையாளர், மற்றும் வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோரின் செயற்குறிப்பினை பரிசீலனை செய்து, மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி, வேலூர் மாநகராட்சியுடன் சேர்க்க முடிவு செய்யப்பட்ட 75 உள்ளாட்சி அமைப்புகளில் 58 உள்ளாட்சி அமைப்புகளை நீக்கம் செய்தும், மேற்படி 17 உள்ளாட்சிகளை வேலூர் மாநகராட்சியுடன் இணைத்து எல்லை விரிவாக்கம் செய்து ஆணைகள் வெளியிடுமாறும் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

8. அரசு, இச்செயற்குறிப்பு தொடர்பான கவனமான பரிசீலனைக்குப் பின்னர், நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரையை ஏற்று, மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி, வேலூர் மாநகராட்சியுடன் சேர்க்க முடிவு செய்யப்பட்ட 75 உள்ளாட்சி அமைப்புகளில் 58 உள்ளாட்சி அமைப்புகள் நீக்கம் செய்யப்படலாம் எனவும், கீழ்க்காணும் 17 உள்ளாட்சி அமைப்புகள் வேலூர் மாநகராட்சியுடன் இணைக்கப்படலாம் எனவும் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

| வ.எண் | உள்ளாட்சி அமைப்பு | மக்கள் தொகை (2001) | பரப்பளவு (ச.கி.மீ) |
|---|---|---|---|
| | **வேலூர் மாநகராட்சி (தற்போதைய)** | 177230 | 11.65 |
| | **இணைக்கப்படவுள்ள உள்ளாட்சி அமைப்புகள்** | | |
| 1 | சத்துவாச்சாரி மூன்றாம் நிலை நகராட்சி | 44942 | 6.53 |
| 2 | தாராபடவேடு மூன்றாம் நிலை நகராட்சி | 30070 | 4.30 |
| 3 | சேண்பாக்கம் பேரூராட்சி | 13390 | 4.40 |

| | | | |
|---|---|---|---|
| 4 | அல்லாபுரம் பேரூராட்சி | 26948 | 1.91 |
| 5 | தொரப்பாடி பேரூராட்சி | 13924 | 5.105 |
| 6 | கழிஞ்சூர் பேரூராட்சி | 16853 | 3.72 |
| 7 | காந்திநகர் பேரூராட்சி | 9487 | 1.66 |
| 8 | காட்பாடி பேரூராட்சி | 149112 | 13.67 |
| 9 | பலவன்சாத்து ஊராட்சி | 16962 | 2.52 |
| 10 | விருபாட்சிபுரம் ஊராட்சி | 12885 | 6.69 |
| 11 | கொணவட்டம் ஊராட்சி | 9359 | 2.71 |
| 12 | விருதம்பட்டு ஊராட்சி | 5352 | 1.32 |
| 13 | காங்கேயநல்லூர் ஊராட்சி | 12669 | 5.82 |
| 14 | இடையன்சாத்து ஊராட்சி | 3716 | 2.92 |
| 15 | அரியூர் ஊராட்சி | 5404 | 5.97 |
| 16 | அலமேலுமங்காபுரம் ஊராட்சி | 5368 | 3.82 |
| 17. | சித்தேரி ஊராட்சி | 3954 | 3.2 |
| | மொத்தம் | 423425 | 87.915 |

9. இவ்வாணை வெளியிடப்படுவதால் உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகளின் தற்போதைய பதவிக் காலம் பாதிக்கப்படாது. மேலும், 2008–ம் ஆண்டு வேலூர் மாநகராட்சி சட்டத்தின் பிரிவு 3 (1)–ன் வகைமுறைகளின்படி தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். 2008–ம் ஆண்டு வேலூர் மாநகராட்சி சட்டத்தின் பிரிவு 3 (1)–ன் கீழ் வெளியிடப்பட வேண்டிய வரைவு அறிவிக்கையினை அரசுக்கு உடன் அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். சட்டப்பிரிவு 3 (1)–ன் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைக்குப் பின்னர், சிறப்பு அதிகாரி நியமிக்கப்பட்டு, விரிவுப்படுத்தப்படவுள்ள வேலூர் மாநகராட்சிப் பகுதிகளுக்கான வார்டு எல்லைகளை நிர்ணயித்தல், மண்டலங்கள் அமைத்தல் குறித்த அறிக்கையை அனுப்ப வேண்டுமென நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். இவ்வறிக்கையின் அடிப்படையில் வார்டுகள் நிர்ணயம் செய்யப்பட்டு விரிவுப்படுத்தப்பட்ட வேலூர் மாநகராட்சிக்கு 2011–ஆம் ஆண்டு சாதாரணத் தேர்தல் நடத்தப்படும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

க. அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 5.
பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை– 108.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர், சென்னை–15.
மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர்.
ஆணையர், வேலூர் மாநகராட்சி, வேலூர்.
தொடர்புடைய நகராட்சி ஆணையர்கள். (நகராட்சி நிர்வாக இயக்குநர் வழியாக)
தொடர்புடைய பேரூராட்சி செயல் அலுவலர்கள். (பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக)
தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள். (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் வழியாக)

<u>நகல்:–</u>
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (மா.ந.2, ந.நி.5, பேரூ.2,அ.ந.2) துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

[signature] 28.1.10
பிரிவு அலுவலர்